# வேதாகமத்தின்படியான ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் என்பது புதிய ஏற்பாட்டின் மாபெரும் விஷயங்களில் ஒன்று ஆகும். "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையானது அதன் பல்வேறு வடிவங்களில் நூற்றுக்கும் மேலான முறைகள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மத உலகில் இந்த விஷயத்தைப் பற்றி அதிகமான குழப்பம் உள்ளது. வேதாகமமானது இதைப் பற்றி உண்மையில் கூறுவதென்ன?

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானஸ்நானத்தைப் பற்றிய நமது பாடமானது "ஞானஸ்நானம் என்றால் என்ன?" என்ற கேள்வியுடன் தொடங்க வேண்டும். அதாவது, ஞானஸ்நானத்தில் மேற்கொள்ளப்படும் செயல்பாடு என்ன?: முழுகுதலா, தெளித்தலா அல்லது ஊற்றுதலா? "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையானது இம்மூன்று செயல்களில் ஏதாவதொன்றை மட்டுமே அர்த்தப் படுத்த முடியுமா? பல ஆண்டுகளாகவே இது ஒரு விவாதத்துக்கான பாடக் கருத்தாகவே இருந்து வருகின்றது, ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இவ்வித விவாதம் எதுவும் இருந்ததாகக் காணப்படுவதில்லை. பல விவாதங்கள் இருந்தன, அவைகளைப் பற்றி வேதவசனங்களிலும் குறிப் பிடப்பட்டுள்ளது; ஆனால் "ஞானஸ்நானப்படுத்தல்" என்ற வார்த்தையின் அர்த்தம் பற்றி விவாதம் இருந்ததாகக் குறிப்பு எதையும் நாம் காணுவதில்லை.

### சொற்றொடர்களினால் விளக்குதல்

ஞானஸ்நானப்படுத்துதல் ("Baptize") என்பது கிரேக்க வார்த்தையின் ஆங்கிலப் படுத்தப்பட்ட வடிவமாகும். அதன் அடிப்படையான அர்த்தம் "மூழ்கடித்தல்" என்பதாகும், இந்த உண்மையானது கிரேக்க வார்த்தைகளை விளக்கிக் கூறும் Greek Lexicon என்ற புத்தகத்திலிருந்து அறியப்பட முடியும். (முதல் நூற்றாண்டில் இருந்த இந்தக் கிரேக்க வார்த்தையின் அர்த்தத்தை ஆங்கில அகராதிலியிருந்து நாம் கற்றறிய முடியாது, "baptize" என்ற வார்த்தையின் அர்த்தத்தை அதில் நாம் காணவும் முடியாது. ஆங்கில

அகராதிகள் இவ்வார்த்தைக்கு நவீன காலத்தில் பொதுவாக ஏற்கப்படும்படியான வகையில் விளக்கம் தரும், இது முதல் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டபடியான இந்த கிரேக்க வார்த்தையின் விளக்கமாய் இருப்பதில்லை.)

''தெளிக்கப்பட'' என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தை ஒன்று உள்ளது; rantize என்பது அதன் ஆங்கிலப் படுத்தப்பட்ட வடிவமாகும். அது போலவே "ஊற்றப்பட" என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தை ஒன்றும் உள்ளது, அது cheo என்பதாகும். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் லேவி. 14:15, 16ல் இம்மூன்று வார்த்தைகளும் (வார்த்து [pour], தோய்த்து [dip], தெளித்து [sprinkle]) உள்ளன. ஆசாரியன் தனது (இடது) கையில் எண்ணெயை வார்க்க வேண்டும். அவர் அந்த எண்ணெயில் தனது (வலது கையின்) விரலைத் தோய்க்க வேண்டும். பிறகு அவர் அந்த எண்ணெயைத் தெளிக்க வேண்டும். இங்கு நாம் இம்மூன்று வார்த்தைகளையும் இரண்டு வசனங்களில் பெறுகின்றோம், மற்றும் ''தோய்த்து'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "baptize" என்ற வார்த்தையே நாம் பெறுகின்ற அதே வார்த்தையின் மூலவடிவமாக உள்ளது. இதே விஷயம் 2 இராஜாக்கள் 5:14ல் வசனப் பகுதியானது நாகமான் முழுகியதைப் பற்றிக் கூறுவதிலும் உண்மையாக உள்ளது. அப்போஸ்தலர்களின் காலத்தில் "baptism" (ஞானஸ்நானம்) என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பற்றிப் பொதுவான புரிந்து கொள்ளுதல் இருந்ததாகக் காணப்படுகின்றது, எனவே அப்பொழுது இதன் அர்த்தத்தைப் பற்றிய விவாதம் எதுவும் இருந்ததில்லை. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிரேக்க மொழியைப் பற்றிய அறிவு ஒன்றும் இல்லாதவர் கூட தமது வேதாகமத்தை எடுத்து ஞானஸ்நானம் என்றால் என்ன என்பதை அவ்வார்த்தையைக் கொண்டுள்ள வசனப் பகுதிகளில் இருந்து அறிய முடியும் என்றே நான் நம்புகின்றேன்.

**சூழ்நிலைகளினால் விளக்குதல்**

பல வசனப் பகுதிகளை நாம் படிக்கையில், ஞானஸ்நானத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது எப்பொழுதுமே ஒரு நதியாகவோ அல்லது "தண்ணீர் மிகுதியாக உள்ள" இடமாகவோதான் இருந்தது என்று அறிகின்றோம் (மத். 3:6; யோவா. 3:23). சவுல் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுமுன் எழுந்து அச்செயலுக்கான தயாரிப்புகளைச் செய்யும்படி கூறப்பட்டது (அப். 22:16). எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றபொழுது, பிரசங்கியாரும், ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டியவரும் ஆகிய இருவருமே ஞானஸ்நானத்திற்கு முன்னால் தண்ணீரில் இறங்கினார்கள் (அப். 8:38). அவர்கள் இருவரும் தண்ணீரில் இருக்கும் பொழுதே ஞானஸ்நானம் நிகழ்த்தப்பட்டது.

முதல் நூற்றாண்டின் ஏவப்பட்ட மனிதர்கள் பகுத்தறிவு உள்ளவர்களாகவே இருந்தார்கள் என்பது நிச்சயம், மற்றும் அவர்களின் செயல்களும் கூட பகுத்தறிவுள்ள செயல்களாகவே இருந்தன. ஞானஸ்நானத்தில் நிகழ்த்தப்பட்ட செயலானது தெளித்தல் அல்லது

ஊற்றுதலாய் இருந்திருந்தால் (மேற்சொன்ன) அவர்களின் செயல்பாடானது பகுத்தறிவுள்ளதாக இருந்திருக்க முடியாது. தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது நதிக்குள் அல்லது தண்ணீருக்குள் இறங்காமல் செய்திருந்தாலே மிகவும் வசதியானதாய் இருந்திருக்கும். உண்மையில் ஞானஸ்நானம் என்பது தெளித்தலை மட்டுமே கொண்டிருந்ததென்றால், (தண்ணீரில் இறங்கிய) அப்படிப்பட்ட செயல்களுக்குக் காரணம் எதுவும் இருக்க முடியாது. இதற்கு எதிரிடையாக, அச்செயல்பாடுகள் யாவற்றிற்கும் முழுகுதலே முழுக்காரணமாய் உள்ளது. ஞானஸ்நானம் என்பது முழுகுதல் என்றானால், பிரசங்கியாரும், ஞானஸ்நானம் பெறுபவரும் தண்ணீருக்குள் இறங்கும்படியாக "மிகுதியான தண்ணீர்" உள்ள இடம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதே இயல்பானதாயிருக்கும். இந்த மனிதர்கள் பகுத்தறிவுடன் செயல்பட்டார்கள் என்று நாம் யூகிப்பதால், முழுகுதல் என்பதே அந்தக் காலத்தில் நிலையாகப் பயன்பாட்டில் இருந்தது என்று தர்க்க ரீதியாக நாம் முடிவு செய்ய வேண்டும்.

**ஜாடையான குறிப்பீடுகளினால் விளக்குதல்**

ஞானஸ்நானத்தின் இயல்பைப் பற்றித் தொடர்புடைய உண்மைகளைக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில் சில தற்செயலான குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட ஜாடையான குறிப்பீடுகளினால் எழுத்தாளர் ஞானஸ்நானத்தை அடிப்படையாய் விளக்குவதற்கு நோக்கம் கொண்டிருந்ததில்லை. இருப்பினும் அதைப் பற்றிய குறிப்பிட்ட சில உண்மைகளை மிகச் சரியாக வெளிப்படுத்தினார்.

ஞானஸ்நானத்தைத் தண்ணீரினால் பிறப்பது என்று யோவான் 3:5ல் இயேசு கூறினார். பிறப்புக்கும் தெளித்தலுக்கும் ஏற்புடைய ஒற்றுமை எதுவும் இருப்பதில்லை. இயேசு "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ. 1:18) என்று அழைக்கப்படுவதால், அவரது உயிர்த்தெழுதல் ஒரு பிறப்புக்கு ஒப்பிடப்பட்டுள்ளது, அதைத் தொடர்ந்து நாம் தண்ணீர்க் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுதல் என்பது அதே வழிமுறையில் வருவதாய் உள்ளது.

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், சுத்த ஜலத்தினால் சரீரத்தைக் கழுவுதல் பற்றிக் குறிப்பிட்டார். இது ஞானஸ்நானத்தை அவசியமாய்க் குறிப்பிடுகின்றது (எபி. 10:22). தெளித்தல் என்பது சரீரத்தைக் கழுவுதல் என்று அழைக்கப்பட முடியாது. பேதுரு தமது வாசகர்களுக்கு, ஞானஸ்நானமானது "மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாய்" (1 பேது. 3:21) இருக்கிறது என்று உறுதிப்படுத்தினார். ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்கும் நோக்கம் கொண்டதல்ல என்று எச்சரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பேதுரு கண்டார். அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது பற்றி அவர் பயம் அடைந்தார் என்பது தெளிவு. ஞானஸ்நானம் என்பது சிறிதளவு தண்ணீர்த் துளிகளைத் தலைமேல் தெளித்துக் கொடுக்கப்பட்டிருந்தால், இந்த எச்சரிக்கைக்கு அவசியம் இருந்திருக்காது. இவை யாவும் இன்னும் மற்ற குறிப்பீடுகளும்

முழுகுதலையே திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டுகின்றன.

**நேரடியான சாட்சியத்தினால் விளக்குதல்**

ஞானஸ்நானம் என்றால் என்ன என்று எளிமையாக அறிவிக்கின்ற சில கூற்றுகளை இப்பொழுது நாம் கவனிப்போம். பவுல், "ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4) என்று கூறினார். கொலோ. 2:12ல் அவர், "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்று எழுதினார்.

முழுகுதலில் நடப்பதென்ன என்பதைப் பற்றிய கூற்று ஒன்றை நிர்மானிக்கும்படி ஒருவர் விரும்புவாரென்றால், நாம் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்டோம் என்பதைக் காட்டிலும் எளிமையான வார்த்தைகளினால் அவர் அதைச் செய்ய முடியாது. தமது தலையில் தண்ணீர்த் துளிகள் சிலவற்றைத் தெளிக்கப்பட்ட மனிதர், தாம் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்ப்பிக்கப்பட்டதாகக் கூற முடியுமா? அவர் இதை உண்மையுடன் கூற முடியாது.

## யார் ஞானஸ்நானம் பெற முடியும்?

யார் ஞானஸ்நானம் பெற முடியும்? இது மிக முக்கியமான ஒரு கேள்வியாய் உள்ளது. சரியான பதில் அவசியமானதாய் உள்ளது.

**முன் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்**

ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியான நபர் யார் என்பதை வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்புப் படிகளைக் கவனிப்பதினால் நாம் அறிய முடியும். இயேசு தமது பிரதான கட்டளையில் ஞானஸ்நானத்தை அங்கீகரித்தார். அந்தக் கட்டளை பற்றிய மத்தேயுவின் பதிவேட்டின்படி, ஞானஸ்நானத்திற்கு முன்பு போதிக்கப்பட வேண்டும். மாற்குவின் பதிவேட்டின்படி, ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசம் ஏற்பட வேண்டும். லூக்காவின் பதிவேட்டின்படி, மனந்திரும்புதல் என்பது பிரசங்கித்தலின் ஒரு பாகமாய் இருக்க வேண்டும் (மத். 28:19, 20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47). பெந்தெகொஸ்தே நாளன்று, மனந்திரும்புதல் என்பது ஞானஸ்நானத்திற்கு முன்பு ஏற்படுதல் தேவை என்றார் பேதுரு (அப். 2:38). ஆகையால், ஒருவர் போதிக்கப்பட்டு, விசுவாசித்து, தனது பாவங்களுக்காக மனந்திரும்பினால் அன்றி, அவர் இயேசுவின் அதிகாரத்தின் பேரில் ஞானஸ்நானம் பெற முடியாது. மனம் வருந்தும் விசுவாசியே ஞானஸ்நானம் பெறும்படி இயேசுவால் அங்கீகரிக்கப்படுகின்றார். பிறந்த குழந்தை ஒன்றுக்கு சுவிசேஷத்தைப் போதிக்கவோ அது விசுவாசிக்கவோ மற்றும் மனந்திரும்பவோ முடியாது. ஆகையால், பிறந்த குழந்தை ஒன்றுக்கு இயேசுவின் அதிகாரத்தின்பேரில்

*ஞானஸ்நானம் கொடுக்க முடியாது. "குழந்தை ஞானஸ்நானத்தை" நடைமுறைப் படுத்துவது என்பது அவரது அதிகாரம் இன்றிச் செயல்படுவதாகும், அவரிடத்தில் சகல அதிகாரமும் இருக்கிறது (மத். 28:18). "குழந்தை ஞானஸ்நானம்" என்று அழைக்கப்படும் விஷயமானது எந்த அளவுக்கு மேலோங்குகின்றதோ, அந்த அளவுக்கு விசுவாசிப்பவர்களின் ஞானஸ்நானம் குறைக்கப்படுகின்றது. இயேசு அங்கீகரித்த ஒரே ஞானஸ்நானம் விசுவாசிப்பவர்களின் ஞானஸ்நானமே ஆகும் என்பதை நாம் நினைவில் வைப்போம்!*

### *"குழந்தை ஞானஸ்நானம்" நடைமுறைப்படுத்தப் படாதிருந்தது (நடைமுறையில் இல்லாதிருந்தது)*

*பிரதான கட்டளையைப் பின்பற்றி அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததின் ஒரு பதிவை நாம் நடபடிகள் புத்தகத்தில் காண்கின்றோம். இயேசுவின் அதிகாரத்தின் கீழ் பணி செய்த அவர்கள், பிரதான கட்டளையின்படி தங்கள் மீது விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தார்கள். அவர்கள் பிறந்த குழந்தைகளை ஞானஸ்நானப் படுத்தினார்கள் என்று சிலர் நிரூபணமற்ற கூற்றை உறுதியாய்ச் சொல்லுகின்றார்கள். அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இயேசுவின் அதிகாரத்தை மீறிச் சென்றவர்களாய் இருந்திருப்பார்கள். மற்றும், பிறந்த குழந்தைகளுக்கு அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்திருந்தால், அந்த நடைமுறை பற்றி நடபடிகள் புத்தகம் மௌனம் காக்கின்றதே. விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 2:37-41; 8:12), ஆனால் பிறந்த குழந்தைகள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்கள் என்பது போன்ற எவ்விதக் குறிப்புகளும் ஏற்படுத்தப்படவில்லை.*

*பார்வோனின் கட்டளை, மற்றும் இயேசு குழந்தைகளை ஆசீர்வதித்தல் போன்ற வேதாகமத்தின் பல நிகழ்ச்சிகளின் தொடர்பாகப் பிறந்த குழந்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளனர், ஆனால் ஞானஸ்நானத்தின் தொடர்பாக எவ்விடத்திலும் பிறந்த குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் தேவன், பிறந்த குழந்தைகளுக்கு விருத்தசேதனத்தைக் கட்டளையிட்டார் - இந்த நடைமுறை - பற்றி மறுபடி மறுபடி குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு எதிரிடையான வகையில், புதிய ஏற்பாட்டில் எவ்விடத்திலும் தேவன், பிறந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளை யிட்டதாக நாம் காண்பதில்லை - மற்றும் அப்போஸ்தலர்கள் இவ்வித நடைமுறையை மேற்கொண்டார்கள் என்பது பற்றிய எந்த ஒரு எடுத்துக்காட்டையும் நாம் காண்பதில்லை.*

*"குழந்தை ஞானஸ்நானத்தை" ஆதரித்து வாதிடுபவர்கள், வீட்டார் ஞானஸ்நானம் பெற்ற நிகழ்ச்சிகளை ஆதாரமாகத் தருகின்றார்கள். அவர்கள் கொர்நேலியு, கிறிஸ்பு, பிலிப்பியச் சிறைச்சாலைக்காரர் மற்றும் லீதியாள் ஆகியோரின் வீட்டாரைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். இந்த வீட்டார்களில் பிறந்த குழந்தைகளும் நிச்சயமாகவே உள்ளடங்கியிருப்பார்கள் என்று இவர்கள் கூறுகின்றார்கள், ஆனால் இது*

தேவையற்ற ஒரு அனுமானம் ஆகும். பிறந்த குழந்தைகள் இல்லாத வீட்டார் எத்தனையோ பேர்களும் கூட இருக்க முடியும். இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொள்ள விரும்புகின்றவர்களால் இந்த முடிவை எட்டுவதற்கு ஏராளமான ஊகங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, லீதியாள் நிகழ்ச்சியைக் கவனியுங்கள். "குழந்தை ஞானஸ்நானம்'' என்பதற்கு வாதிடுபவர், முதலாவது லீதியாள் திருமணமானவள் என்றும், அவள் குழந்தைகள் பெற்றவள் என்றும், அக்குழந்தைகள் (புதிதாய்ப்) பிறந்த குழந்தை(கள்) என்றும், அவைகள் அவளுடன் வியாபார விஷயமாகத் தீயத்தீராவில் இருந்து பிலிப்பி நகருக்குச் சென்றன என்றும் ஊகம் செய்தாக வேண்டும்! இப்படிப்பட்ட தொடர்ச்சியான ஊகங்களினால், எந்த ஒரு நடைமுறையும் நிச்சயமாகவே பாதுகாப்புள்ளதான ஆதாரத்தைப் பெற முடியாது. நாம் மேலே குறிப்பிட்ட மற்ற நிகழ்ச்சிகளில் ஒவ்வொன்றிலுமே வீட்டாரில் பிறந்த குழந்தைகள் இருந்திருப்பார்கள் என்பதற்கான சாத்தியக் கூற்றை கட்டாயமாகவே விலக்கி வைக்கின்றன. கொர்நேலியுவின் வீட்டார் ''தேவனுக்குப் பயந்திருந்தனர்'' (அப். 10:2). கிறிஸ்புவின் வீட்டார் ''விசுவாசம் உள்ளவர்கள்'' ஆயினர் (அப். 18:8). மற்றும் பிலிப்பிச் சிறையதிகாரியின் வீட்டார் "விசுவாசம் உள்ளவர்கள்" ஆயினர் (அப். 16:34). பிறந்த குழந்தைகள் தேவனுக்குப் பயப்படுவதில்லை, மற்றும் அவைகள் விசுவாசிப்பதும் இல்லை. ஆகையால், அந்தக் குடும்பங்களில் அவர்கள் உள்ளடங்கியிருந்திருக்க முடிந்திராது.

**"குழந்தை ஞானஸ்நானம்" தர்க்கரீதியற்றதாக உள்ளது.**

பிறந்து குழந்தையானது பாவமற்றதாய் இருக்கிறதென்று இயேசு போதித்தார் (மத். 18:3). மனம்மாறிய நிலையில் நாம் "பிள்ளைகளைப் போல் ஆகின்றோம்" என்றும் அவர் போதித்தார். பாவமன்னிப்பு என்பதே ஞானஸ்நானத்தின் நோக்கமாய் இருப்பதால் (அப். 2:38), பிறந்த குழந்தைக்கு வேதவசனங்களின்படி ஞானஸ்நானம் கொடுப்பது இயலாத செயலாகும். தெர்த்துல்லியன் போன்ற தொடக்க கால எழுத்தாளர்கள், பிறந்த குழந்தைகள் பாவமற்றவர்கள் என்று வாதிட்டிருந்தாலும் "பிறந்த குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்தல்'' என்ற செயலானது, பிறந்த குழந்தைகள் ஜென்மப் பாவம் உடையவைகளாய் இருக்கின்றன என்ற கருத்தினால் பல ஆண்டுகளாகத் தற்காக்கப்பட்டுள்ளது. சபையில் முதல் இரண்டு நூற்றாண்டுகளாக இந்த நடைமுறை ஆதரிக்கப்படவோ அல்லது குறிப்பிடப்படவோ கூடக் கிடையாது. மற்றும், குழந்தை ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொள்ளும் சாத்தியக் கூறும் கூட புதிய ஏற்பாட்டின் போதனைகளில் விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்கள், ஜென்மப் பாவமே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கான காரணமாகும் என்ற கருத்தை விட்டு விட்டார்கள். எனவே "குழந்தை ஞானஸ்நானம்" என்பது அர்த்தமோ, தர்க்கவியலோ இல்லாத ஒரு நடைமுறையாகும்.

ஞானஸ்நானம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படியும் மாண்புமிக்க ஒரு செயல் ஆகும்.

## ஞானஸ்நானம் தேவையா?

"பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28:19). தேவத்துவத்தில் உள்ள மூன்று உறுப்பினர்களின் பெயர்களால் நிறைவேற்றப்படும் செயலானது நிச்சயமாகவே ஒரு முக்கியமான வடிவமைப்பு உள்ளதாயிருக்க வேண்டும். ஞானஸ்நானத்தின் வடிவமைப்பு என்ன? அது எதற்காக? இது தேர்ந்து கொள்ளப்படும் ஒரு சடங்குதான் என்று பலர் வலியுறுத்தியுள்ளனர். இதற்கு மாறான வகையில், இதன் வடிவமைப்பானது, தகுதியான முறையில் ஞானஸ்நானப்படுத்தப்படாமல் ஒருவர் கிறிஸ்தவராக முடியாது என்பதே இதன் இயல்பாக உள்ளது.

**இது இரட்சிப்பிற்கான நிபந்தனையாக உள்ளது**

கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும் ஏனென்றால் ஞானஸ்நானத்தை இரட்சிப்பின் நிபந்தனையென்று இயேசு பெயரிட்டார் (மாற். 16:16). ஞானஸ்நானம் இரட்சிப்பின் முன்னதாக வைக்கப்பட்டுள்ளது. இது விசுவாசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்துதான் இரட்சிப்பு உண்டாகின்றது. ஞானஸ்நானம் என்பது மட்டும் ஒரு நிபந்தனையல்ல, மற்றும் அது மிக முக்கியமான நிபந்தனையுமல்ல; ஆனால் இது இரட்சிப்பின் திட்டத்தினுடைய நிபந்தனைகளில் ஒன்றாக உள்ளது. வானமும் பூமியும் ஒழிந்து போகும், ஆனால் இயேசுவின் வார்த்தைகள் தவறுவதில்லை. இயேசுவின் சொந்த வார்த்தைகளைக் கவனித்த பிறகும் கூட, ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற மறுப்பவன் இரட்சிக்கப்படுவான்" என்று சொல்வதற்கு யார் துணியக் கூடும்? இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்றே கூறினார்.

**இது பாவமன்னிப்புக்கானது**

கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், ஏனென்றால் ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்பிற்கானது என்றே புதிய ஏற்பாடு போதிக்கின்றது (அப். 2:38). இது ஏவப்பட்ட அப்போஸ்தலரான சீமோன் பேதுரு, ஆவியானவர் தந்த வார்த்தையின்படி கூறிய கூற்றாகும். "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு பதிலாக இது கொடுக்கப்பட்டது. தேவனுடைய சுவிசேஷ செய்தியைத் தலைசிறந்த வகையில் எடுத்துரைத்து அதன் மூலம் பேதுரு மூவாயிரம் மக்களின் குற்றத்தை உணர்த்தி அவர்களை நம்பச் செய்திருந்தார். விசுவாசித்தவர் களின் கூட்டம் ஒன்றுக்கு அவர், ''மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்

நானம் பெற்றுக் கொள்ளுங்கள், ...” என்று கூறினார்.

இவ்வசனப் பகுதியில் மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் இணைக்கப்பட்டுள்ளது. அவையிரண்டும் இணைந்து பாவமன்னிப்பிற்கானவையென்று கூறப்படுகின்றது. மனந்திரும்புதல் எதற்காகவோ, அதற்காகவே ஞானஸ்நானமும் இருக்கின்றது. சிலர், நடபடிகளில் மனம் மாறியவர்கள் “பாவமன்னிப்பினால்” ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற கருத்தில் திருப்தியடைந்தால், பாவமன்னிப்பினால் அவர்கள் மனந்திரும்ப வேண்டியதாகவும் இருந்தது. இது எவ்விதமான அறிவுப்பூர்வமான கருத்தையும் ஏற்படுத்துவதில்லை! மனந்திரும்புதலுக்குப் பிறகுதான் பாவமன்னிப்பு உண்டாகிறதென்றால், அது (பாவமன்னிப்பு) ஞானஸ்நானத்திற்குப் பிறகுதான் உண்டாகின்றது. மத். 26:28ல் “பாவமன்னிப்புண்டாகும்படி” என்ற இதே போன்ற விளக்கம் ஒன்றை நாம் பெற்றுள்ளோம். கிறிஸ்துவின் இரத்தமானது பாவமன்னிப்புக்காகச் சிந்தப்பட்டது. பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டதால் கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார் என்ற கருத்தில் யாரும் திருப்தியடைய முடியாது என்பது உறுதி. அவர் நமக்குப் பாவமன்னிப்பைப் பெற்றுத் தருவதற்காகவே தமது இரத்தத்தைச் சிந்தினார். அந்த பாவமன்னிப்பைப் பெறுவதற்காகவே பாவிகள் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும்.

**இது நம்மை இரட்சிக்கின்றது**

ஞானஸ்நானம் பெறுவது அவசியமானதாகும் ஏனென்றால், இப்பொழுது ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறதென்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது (1 பேது. 3:21). மறுபடியும் நாம் பேதுருவின் வார்த்தைகளைக் கவனிப்போம். ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கின்றது! இயேசு நம்மை இரட்சிக்கின்றார் என்ற கருத்தில் அது இரட்சிப்பதில்லை; ஞானஸ்நானம் நமது இரட்சகரல்ல. இருப்பினும், இரட்சிப்பில் குறிப்பிடப்பட்டவைகளின் கூறுகளில் ஒன்றாக அது இருப்பதால் அது நம்மை இரட்சிக்கிறதென்று கூறப்படுகின்றது. மனிதர் இரட்சிப்பை அனுபவிப்பதற்கு இயேசுவால் கூறப்பட்ட நிபந்தனைகளில் இதுவும் ஒன்றாக உள்ளது. ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை என்று முடிவு செய்யும் வகையில் இவ்வசனப் பகுதியைப் பலர் விளக்க முயற்சி செய்துள்ளனர் - ஆனால் அது இரட்சிக்கின்றது என்றே பேதுரு கூறினார்! ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை என்ற முடிவை அடைவதற்காகப் பேதுருவின் இவ்வார்த்தைகளை ஒருவர் “விளக்குவதற்கு” முயற்சி செய்யும் பொழுது, அவரது “விளக்கமானது” இந்தக் கூற்றின் தெளிவான மறுப்பாகின்றது.

**இது நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகின்றது**

கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், ஏனென்றால் ஞானஸ்நானம் நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகின்றது என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது (ரோமர் 6:3, 4). நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் பொழுது நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகின்றோம் (கலா. 3:27) மற்றும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகள்

ஆகின்றோம் (2 கொரி. 5:17). கிறிஸ்துவில்தான் மீட்பு உள்ளது (எபே. 1:7). நித்திய ஜீவன் கிறிஸ்துவில்தான் உள்ளது (1 யோவா. 5:11). உண்மையில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன (எபே. 1:3). உலகம் முழுவதும் பொல்லாங்கனுடைய வல்லமைக்குள் கிடக்கையில் (1 யோவா. 5:19), கிறிஸ்தவர் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றார். ஞானஸ்நானம் என்பது ஒருவரை கிறிஸ்துவுக்குள்ளாக்கும் செயல் ஆகும்.

**இது பாவங்களைக் கழுவிப் போடுகின்றது**

கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், ஏனென்றால் பாவங்கள் போகக் கழுவப்படுவதுடன் ஞானஸ்நானம் தொடர்புள்ளது என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது (அப். 22:16). இந்தக் கழுவுதல் பற்றி மற்ற வேத வசனங்களும் குறிப்பிடுகின்றன (எபே. 5:26; எபி. 10:22; தீத்து 3:5). "ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு ..." (அப். 22:16) என்று சவுலுக்குக் கூறப்பட்டது. தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கர்த்தர் சவுலிடத்தில் அவர் என்ன செய்ய "வேண்டும்" என்பது தமஸ்குவில் அவருக்குக் கூறப்படும் என்று உரைத்திருந்தார் (அப். 9:6). அவர் ஞானஸ்நானம் பெற்றுத் தன் பாவங்களைக் கழுவிப் போக்கிக் கொள்ளும்படி கூறப்பட்டார்.

தண்ணீரானது பாவங்களைக் கழுவிப் போக்க முடியும் என்று நம்ப முடியாததால் பலர் ஞானஸ்நானத்தைப் பாவங்களைக் கழுவிப் போக்குவதுடன் தொடர்புபடுத்த மறுக்கின்றார்கள். இருப்பினும், அப். 22:16ல் பாவங்கள் தண்ணீரினால் கழுவிப் போக்கப்படுகிறதென்று கூறப்படுவதில்லை. உண்மையிலேயே, எது பாவங்கள் போகக் கழுவுகிறது என்று கூறுவதில்லை. எப்பொழுது பாவங்கள் கழுவிப் போக்கப்படுகின்றன என்று மட்டுமே இது கூறுகின்றது. நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமது பாவங்களறக் கழுவப்பட்டதாக யோவான் அறிவித்தார் (வெளி. 1:6). இந்த வசனப் பகுதியானது பாவங்களைக் கழுவிப் போக்குவது எது என்று கூறுகின்றது ஆனால் எப்பொழுது என்று கூறுவதில்லை. அப். 22:16ஐயும், வெளி. 1:6ஐயும் நாம் இணைத்துப் பார்க்கும் பொழுது நாம் எது (கிறிஸ்துவின் இரத்தம்) மற்றும் எப்பொழுது (ஞானஸ்நானத்தின் பொழுது) ஆகியவற்றைப் பெறுகின்றோம். இரத்தமானது சொற்பொருளான முறையில் பாவங்களைக் கழுவிப் போடுவதில்லை, மற்றும் நாம் சொற்பொருளான முறையில் இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்ள முடியாது. தேவன் அதை நியமித்துள்ள நோக்கத்தின் வழிமுறைப்படி நாம் அதை ஆவிக்குரிய முறையில்தான் அணுக முடியும்/வேண்டும்.

**இது நம்மை கிருபையினால் இரட்சிக்கப்படக் கூடியவர்களாக்குகின்றது.**

கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், ஏனென்றால் நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோமென்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது (எபே. 2:5, 8, 9; தீத்து 2:11). கிருபையானது

அளித்துள்ள பிரமாணங்களுக்கு இணங்காத வரையிலும் எந்த நபரும் கிருபையினால் இரட்சிக்கப்படுவதில்லை. "நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" (ஆதி. 6:8). நோவா தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததினால் கிருபையினால் பயன் அடைந்தார். தேவன் எரிகோ நகரத்தை யோசுவாவின் கைகளில் கொடுத்தார் (யோசு. 6:2), ஆனால் தேவன் நியமித்திருந்த நிபந்தனைகளைச் சந்திக்காத வரையிலும் யோசுவா இந்த ஈவைப் பெற்றுக் கொள்ளாதிருந்தார். நமது அன்றாட உணவானது கிருபையின் விஷயமாய் இருக்கின்றது. இது தேவனுடைய ஈவாக உள்ளது. இருந்த போதிலும், இயற்கையின் விதிகளுக்கு நாம் இணங்காத வரையில் நமது அன்றாட உணவை நாம் பெறுவதில்லை. நமது இரட்சிப்பும் அது போலவே இருக்கின்றது. நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகின்றோம், ஆனால் கிருபையானது கீழ்ப்படியாதவர்களை இரட்சிப்பதில்லை. ஞானஸ்நானத்தை இரட்சிப்பின் நிபந்தனையாக இயேசு கட்டளையிட்டுள்ளதால், தேவனுடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து தொடருகின்றது.

### இது விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படும்படி அனுமதிக்கின்றது

நிறைவாக, கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும், ஏனென்றால் நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகின்றோம் என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது. உதவுகின்ற விசுவாசம் கிரியை செய்கின்ற விசுவாசமேயாகும் (கலா. 5:6). கிரியைகளில்லாமல் செத்த விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை (யாக். 2:26). கிரியைகளினாலே விசுவாசமானது பூரணப்படுகின்றது (யாக். 2:22). மாற்கு 16:16ன்படி, ஞானஸ்நானம் என்பது விசுவாசத்துடன் தொடர்புடைய கீழ்ப்படிதலின் செயலாய் இருக்கின்றது: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." இது உண்மையாயிருப்பதால், ஒருவரை ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி அசைக்கின்ற பலத்த விசுவாசமே இரட்சிக்கும் விசுவாசம் ஆகும். கீழ்ப்படியும்போதுதான் விசுவாசமானது இரட்சிக்கின்றது.

## முடிவுரை

"ஞானஸ்நானப் படுத்துதல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தில் இருந்தும், புதிய ஏற்பாட்டில் நாம் காணும் பல உதாரணங்கள் மற்றும் கூற்றுகளில் இருந்தும் நாம் பல முடிவுகளை அடைய முடியும். பவுலின் எழுத்துக்களில் உள்ள பல்வேறு குறிப்பீடுகள், ஞானஸ்நானமானது அடக்கம், முழுகுதல் என்ற விளக்கத்திற்கு முற்றிலும் இணங்குகின்றன. இந்த ஞானஸ்நானமானது மனம் வருந்திய விசுவாசிகளுக்கு மட்டுமே அவர்கள் பாவமன்னிப்புப் பெறும்படியும், தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படும்படியும் தரப்பட்டது என்று நாம் காண்கின்றோம்.

ஞானஸ்நானமானது நம்மை இரட்சிக்கின்றது, நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகின்றது என்று நாம் கண்டிருக்கின்றோம். நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக உள்ள ஞானஸ்நானமானது தேவனுடைய கிருபையைப் பயன்படுத்திக் கொள்ளும் செயலாக உள்ளது, ஏனென்றால் அந்தக் கணத்தில்தான் பாவங்கள் கழுவிப் போக்கப்படுகின்றன. மேற்கண்டவைகள் எல்லாவற்றையும் கவனித்துப் பார்க்கும் பொழுது, நமது இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமாக உள்ளது என்ற கருத்து வலுவாகின்றது.

நீங்கள் இந்த வழிமுறையில் இந்தக் காரணத்திற்காக ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” (அப். 22:16).